**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS.No. 105/2021**

| | | | |
|---|---|---|---|
| | | DEPOSITION OF WITNESS | PW.1 |
| NAME | புருசோத்தமன் | TALUK | குடியாத்தம் |
| HUSBAND NAME | பெருமாள் மேஸ்திரி | RELIGION | இந்து |
| AGE | 55 | OCCUPATION | |
| VILLAGE | மேட்டூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 05.08.2025.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன் என்றால் எனக்கு சொந்தமான சொத்தை அபகரிக்க முயற்சி செய்வதாக வழக்கு போட்டுள்ளேன். எனது சொத்தின் சர்வே எண்.155, 156. மேற்படி சர்வே எண்.155, 156–ன் உட்பிரிவு எண் தெரியுமா என்றால் உட்பிரிவு எதுவும் கிடையாது. நான் வழக்கை சர்வே எண்.155, 156 முழுவதற்கும் போட்டுள்ளீர்களா என்றால் ஆமாம்.

2. இந்த வழக்கில் பிரதிவாதி கோவிந்தராஜ் என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லியுள்ள சொத்து எந்த ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு பாத்தியப்பட்டது என அதில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தின் சொல்லியுள்ள சொத்து எனக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் எனது பாட்டன் சம்பாதித்த சொத்து. அவரது பெயர் என்னவென்றால் ராமானுஜிலு மேஸ்திரி.

3. எனது பாட்டனார் எப்போது தாவா சொத்தை கிரையம் பெற்றார் என தெரியுமா என்றால் தெரியவில்லை, ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். ஆவணங்களை வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். அந்த கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். அடுத்த வாய்தாவில் தாக்கல் செய்கிறேனா என்றால் தாக்கல் செய்கிறேன்.

(மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்ய வேண்டியும் பிரதிவாதி தரப்பில் வேண்டுகோளுக்கிணங்கவும் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

K KARTHICK ASATH — Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.